Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 4 பக்கம் புதன்கிழமை, ஆகஸ்ட் 18, 2021 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 35

# மு.க.ஸ்டாலின் 42 சதவீதத்துடன் முதலிடம்

## 'மூட் ஆஃப் தி நேஷன்' கருத்துக் கணிப்பில் இந்தியாவில் சொந்த மாநிலங்களில் மிகவும் பிரபலமான முதல்வர்

சென்னை, ஆகஸ்ட் 18 2021: பிரபல செய்தி நிறுவனமான இந்தியா டுடே 'மூட் ஆஃப் தி நேஷன்' என்ற தலைப்பில் நடத்திய கருத்துக் கணிப்பை ஆகஸ்ட் 16 அன்று வெளியிட்டது. பல்வேறு காரணங்களுக்கான எடுக்கப்படும் இந்த கருத்து கணிப்பு இந்த முறை சொந்த மாநில மக்களின் மனம் கவர்ந்த முதலமைச்சர்கள் பட்டியலில் யாருக்கு அதிக செல்வாக்கு உள்ளது என்பதுதான். அதன்படி, இந்தியாவில் சொந்த மாநிலங்களில் மிகவும் பிரபலமான முதல்வராக தமிழ்நாட்டின் மு.க.ஸ்டாலின் 42 சதவீதத்தில் முதலிடத்தை பிடித்துள்ளார்.

அவருக்கு அடுத்தபடியாக ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் 38% பெற்று இரண்டாவது இடத்திலும், கேரளா முதலமைச்சர் பினராயி விஜயன் 35% பெற்று மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

மகாராஷ்டிரா முதல்வர் உத்தவ் தாக்கரே 31% பெற்று நான்காவது இடத்திலும் மேற்கு வங்கம் முதல்வர் மம்தா பானர்ஜி 30% பெற்று ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

அசாம் முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா மற்றும் உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் முறையே 6 மற்றும் 7 வது இடங்களில் உள்ளனர்.



அவர்களின் மதிப்பீடு 29%ஆகும்.

அதுபோல, ஜூலை மாதத்திற்கான இந்தியாவின் சிறந்த முதல்வருக்கான கருத்துக் கணிப்பை ஆர்மாக்ஸ் செய்தி நிறுவனம் வெளியிட்டது. இந்த கருத்துக்கணிப்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறந்த முதலமைச்சராக முதல் இடத்தை பிடித்துள்ளார்.

ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் மற்றும் கேரளா முதல்வர் பினராயி விஜயன் இரண்டாவது இடத்தில் உள்ளனர். அவர்களைத் தொடர்ந்து 3வது இடத்தில் உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த யோகி ஆதித்யநாத் மற்றும் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த மம்தா பானர்ஜி ஆகியோர் உள்ளனர். இரண்டு மாதங்களுக்கு முன் முதலிடத்தில் இருந்த ஆந்திர முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி இப்போது 5 வது இடத்திற்கு சரிந்துள்ளார்.

முதல் 5 வரிசைகளில் மூன்று இடத்தை பிடித்த முதல்வர்கள் 3 பேரும் கடந்த மே சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் என்பது கவனிக்கத்தக்கது.

## சமையல் எரிவாயு விலை ரூ.875 ஆக உயர்த்தியுள்ளது, ஏழைகள் மற்றும் நடுத்தர மக்களைக் கடுமையாக பாதிக்கும் - டாக்டர் ராமதாஸ் கண்டனம்





சென்னை, ஆகஸ்ட் 18 2021: சமையல் எரிவாயு விலையை பாரதீய ஜனதா அரசு ஏற்றியுள்ளது குறித்து, பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் கூறி இருப்பதாவது:-

இந்திய அரசு, வீட்டுப்பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு விலையை, 850 ரூபாயிலிருந்து ரூ.875 ஆக உயர்த்தி இருப்பது எந்த வகையிலும் நியாயமற்றது. கொரோனாவால் வாழ்வாதாரம் இழந்துள்ள ஏழைகள் மற்றும் நடுத்தர மக்களைக் கடுமையாக பாதிக்கக்கூடியதாகும். கடந்த 6 மாதங்களில் சமையல் எரிவாயு விலை 710 ரூபாயிலிருந்து ரூ.165, அதாவது 23% உயர்த்தப்பட்டிருக்கிறது. சமையல் எரிவாயு என்ற அத்தியாவசியப் பொருளின் விலையை ஆண்டுக்கு 46% என்ற அளவுக்கு உயர்த்துவது நியாயமா? என எண்ணெய் நிறுவனங்கள் சிந்திக்க வேண்டும்.

சமையல் எரிவாயு விலையை குறைக்கும்படி எண்ணெய் நிறுவனங்களுக்கு இந்திய அரசு ஆணையிட வேண்டும். தமிழக அரசும் அதன் பங்குக்கு ரூ.100 மானியம் வழங்கி சமையல் எரிவாயு விலையை கட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

## பள்ளி மாணவிகளுக்குப் பாலியல் தொல்லை கொடுத்த சிவசங்கர் பாபாவின் 2 ஜாமீன் மனுக்கள் தள்ளுபடி - சென்னை உயர் நீதிமன்றம்

சென்னை, ஆக. 18 2021: பள்ளி மாணவிகளுக்குப் பாலியல் தொல்லை கொடுத்ததாகக, கைது செய்யப்பட்ட சிவசங்கர் பாபாவின் இரண்டு ஜாமீன் மனுக்களை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம் கேளம்பாக்கத்தில் உள்ள தனியார் பள்ளியில் படித்தபோது சிவசங்கர் பாபா பாலியல் தொல்லை கொடுத்ததாக, முன்னாள் மாணவிகள் அளித்த புகாரில், அவர் மீது போக்சோ சட்டத்தில் மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இந்த வழக்கு சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றப்பட்ட பின்னர், தலைமறைவான சிவசங்கர் பாபாவை சிபிசிஐடி போலீஸார் ஜூன் 16ஆம் தேதி டெல்லியில் கைது செய்து, செங்கல்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்துள்ளனர்.

ஏற்கெனவே அவரது இரண்டு ஜாமீன் மனுக்கள் செங்கல்பட்டு போக்சோ நீதிமன்றம் மற்றும் மாவட்ட முதன்மை நீதிமன்றம் ஆகியவற்றில் தள்ளுபடி செய்யப்பட்டன. இதையடுத்து, இரு வழக்குகளிலும் ஜாமீன் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனு நீதிபதி எம்.தண்டபாணி முன்பு விசாரணைக்கு வந்தபோது, புகார் அளித்த பெண்ணிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தை சீலிடப்பட்ட கவரில் காவல்துறையினர் தாக்கல் செய்தனர்.

பின்னர், சிவசங்கர் பாபா தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், 2015, 2018, 2020ஆம் ஆண்டுகளில் பாலியல் தொல்லை கொடுத்ததாக முன்னாள் மாணவிகள் கொடுத்த புகார்களில், இந்த ஆண்டு ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் போக்சோ சட்டம், இந்திய தண்டனைச் சட்டம், தகவல் தொழில்நுட்பச் சட்டம் ஆகியவற்றின் பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, 3 முறை கைது செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

ஜாமீன் மனுக்கள் தள்ளுபடி

மேலும், புகார் அளித்த மாணவிகளில் ஒருவர் தன்னுடைய பள்ளிப் படிப்பை முடித்துச் சென்ற பிறகும், 20 நடன நிகழ்ச்சிகளைத் தன்னுடைய பள்ளியில் நடத்தியுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், 2015ஆம் ஆண்டு பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டதாகக் கூறும் மாணவி ஒருவர், 2019ஆம் ஆண்டு பாபாவைக் குறித்தும் அவருடைய பள்ளியைக் குறித்தும் புகழ்ந்து, சமூக வலைதளத்தில் தெரிவித்திருந்த கருத்துகளும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டன.




10 ஆண்டுகளுக்குக் குறைவான தண்டனைக்குரிய சட்டப்பிரிவில் கைது செய்யப்பட்டுள்ள சிவசங்கர் பாபா மீது, 60 நாட்களுக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும் என்பதாலேயே, வெவ்வேறு மாதங்களில் 3 முறை காவல்துறையினர் கைது செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வாதங்களைக் கேட்ட நீதிபதி, ஜாமீன் மனுக்கள் மீதான தீர்ப்பைத் தேதி குறிப்பிடாமல் தள்ளி வைத்திருந்தார். இந்த மனுக்களில் இன்று தீர்ப்பளித்த நீதிபதி தண்டபாணி, பாலியல் தொல்லை குற்றச்சாட்டில் கைதாகியுள்ள சிவசங்கர் பாபாவின் இரண்டு ஜாமீன் மனுக்களையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார்.

## செங்கல்பட்டு கிழக்கு மாவட்டத்தில் உள்ளாட்சி தேர்தலில் அமோக வெற்றி பெற பாடுபட வேண்டும் மாவட்ட கழக செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ்.ஆறுமுகம் சூளுரை

காஞ்சிபுரம், ஆக.18 2021: செங்கல்பட்டு கிழக்கு மாவட்டத்தில் வருகிற உள்ளாட்சி தேர்தலில் நாம் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட்டு அதிமுக வெற்றிக்கு பாடுபட வேண்டும் என்று மாவட்ட கழக செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ்.ஆறுமுகம் சூளுரைத்தார்.

காஞ்சிபுரம் கிழக்கு மாவட்ட அதிமுக செயல்வீரர்கள் கூட்டம் திருக்கழுக்குன்றம்-கருங்குழி சாலையில் உள்ள நாவலூர் நடைபெற்றது. இக்கூட்டத்தில் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் பெருந்தலைவருமான திருக்கழுக்குன்றம் எஸ்.ஆறுமுகம் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழக முதல்வராக இருந்த எடப்பாடி கே.பழனிச்சாமி, துணை முதல்வராக இருந்த ஓ. பன்னீர்செல்வம் ஆகியோர் தமிழ்நாட்டு மக்களுக்காக அல்லும் பகலும் கடுமையாக உழைத்து மக்களின் நல திட்டங்களை வாரிவாரி வழங்கினார்கள். குறிப்பாக பெண்களுக்கு அனைத்து திட்டங்களும் உடனுக்குடன் செய்து அனைவரின் இதயத்தில் அண்ணா திமுக இடம்பிடித்தது. மேலும் தாலிக்கு தங்கம், திருமண நிதி உதவி, விவசாய கடன் தள்ளுபடி உள்ளிட்ட பல்வேறு அடுக்கடுக்கான சாதனைகளை அண்ணா திமுக அரசு செய்து அனைவரின் பாராட்டையும் பெற்றுத் தந்துள்ளது. வருகின்ற உள்ளாட்சி தேர்தலில் நாம் அனைவரும் ஒற்றுமையாக பாடுபட்டு வெற்றி வாகை சூடிட இப்போதிலிருந்து உழைக்க தயாராகுங்கள். உள்ளாட்சித் தேர்தலில் வெற்றிக்கனியை நமது முன்னாள் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி, முன்னாள் துணை முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் ஆகியோரிடம் சமர்ப்பிப்போம். அண்ணா திமுக என்ற பெரிய இயக்கத்தை யாராலும் எந்த கொம்பனாலும் அழிக்க முடியாது. தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் முன்னாள் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி துணை முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் ஆகியோர் என்றும் துணை நிற்பார்கள் இதில் எந்தவித மாற்றமும் இல்லை இவ்வாறு அவர் தெரிவித்தார்.



சிறப்பு அழைப்பாளராக தகவல் தொழில்நுட்ப பிரிவு சென்னை மண்டல செயலாளர் கோவை சத்தியன் கலந்து கொண்டு உள்ளாட்சி தேர்தலில் அனைவரும் ஒன்றாக இணைந்து கழக வெற்றிக்கு பாடுபட வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் ம.தனபால், மாவட்ட எம்.ஜி.ஆர் மன்ற செயலாளர் வீ.வேலாயுதம், மாவட்ட பேரவை செயலாளர் ஆனூர் வி.பக்தவச்சலம், மாவட்ட கழக துணைச் செயலாளர் எஸ்வந்த்ராவ், ஒன்றிய கழக செயலாளர்கள் பெரும்பாக்கம் சி.விவேகானந்தன், மாமல்லபுரம் ஜி. ராகவன், செங்கல்பட்டு நகர செயலாளர் வி.ஆர் செந்தில்குமார், மாவட்ட மீனவர் அணி செயலாளர் களியபெருமாள், காதர் உசேன், மாவட்ட எம்ஜிஆர் மன்ற நிர்வாகி இடைக்கழிநாடு ஜெ. பாலசுப்பிரமணியம், இடைக்கழிநாடு பேரூராட்சி செயலாளர் டி.ஆறுமுகம், மாவட்ட வழக்கறிஞர் பிரிவுச் செயலாளர் செய்யூர் ஜி.ஜெயச்சந்திரன், திருக்கழுக்குன்றம் ஒன்றிய இளைஞரணி செயலாளர் மணி என்கிற புருஷோத்தமன், இளைஞர் பாசறை கிளை செயலாளர் திட்டாலாம்

ம.தாவீதுராஜா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் திருக்கழுகுன்றம் பேரூர் கழக செயலாளர் எம் தினேஷ் குமார் நன்றி கூறினார்.

## தமிழக அரசின் 100 நாள் சாதனை இந்திய ஜனநாயக கட்சியின் இணை பொதுச்செயலாளர் லீமா ரோஸ் மார்ட்டின் புகழாரம்

கோவை, ஆகஸ்ட் 18 2021: தமிழகத்தில் திமுக தலைமையில் ஸ்டாலின் முதல்வராக பொறுப்பேற்று 100 நாட்கள் நிறைவடைந்துள்ள நிலையில்,தமிழகத்தின் 100-நாட்கள் தி.மு.க.வின் ஆட்சி சாதனைகள் குறித்து,பல்வேறு தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் இந்திய ஜனநாயக கட்சியின் இணை பொதுச்செயலாளர் லீமாரோஸ் மார்ட்டின் 100 நாள் ஆட்சி குறித்து கோவையில் செய்தியாளர்களிடம் பேசினார்.அப்போது அவர், திமுக தலைமையில் முதல்வராக பொறுப்பேற்றுள்ள முக.ஸ்டாலின் மிக சிறப்பான ஆட்சியை நடத்தி வருவதாகவும், குறிப்பாக ஆட்சிக்கு வரும்போது கொரோனா இரண்டாவது அலை பரவல் நேரத்தில், தீவிர நடவடிக்கைகளை எடுத்து 100 நாட்களில் கொரோனா பரவலை வெகுவாக கட்டுபடுத்தியதாக குறிப்பிட்ட அவர் குறிப்பாக கோவை வந்த முதல்வர் மருத்துவர்களே கொரோனா வார்டுக்கு செல்ல அச்சப்படும் நிலையில் துணிச்சலாக உள்ளே சென்று நோயாளிகளிடம் நலம் விசாரித்தது மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளதாகவும், மேலும் கொரோனா தடுப்பூசியை மத்திய அரசிடமிருந்து பெற்று தமிழகத்தில் அதிக அளவில் பொதுமக்கள் தடுப்பூசி போட அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும், முதல்வரின் கொரோனா தடுப்பு நடவடிக்கையில் பிரதமர் மோடியே முதல்வர் ஸ்டாலினை பாராட்டி உள்ளதாக அவர் தெரிவித்தார்.



மேலும் மகளிருக்கு இலவச பேருந்து பயணம்,கூட்டுறவு நகை கடன் ரத்து உள்ளிட்ட தேர்தல் வாக்குறுதிகளை படிபடியாக நிறைவேற்றி வருவதாகவும், மேலும் ஆடி மாதம் திருவாதிரை அன்று பிறந்த ராஜேந்திர சோழன் பிறந்த தினத்தை அரசு விழாவாக கொண்டாட அறிவித்துள்ள முதல்வருக்கு தமது நன்றிகளையும்,பாராட்டுகளை யும் தெரிவிப்பதாக அவர் கூறினார்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# எஸ்பிஐ சில்லறை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் எக்கச்சக்க சலுகைகள்!!

*சென்னை, 18 ஆகஸ்ட் 2021 :* நாடு முழுவதும் சுதந்திர தின பவள விழா கொண்டாடப்பட்டு வரும் வேளையில் - மத்திய அரசும் 75-வது சுதந்திர தின விழாவை மிகப்பிரம்மாண்டமாக கொண்டாட தயாராகி வருகிறது. அதே போல தேசத்தின் மிகப் பெரிய வங்கியான பாரத ஸ்டேட் வங்கி அதன் வாடிக்கையாளர்களுக்கு சில்லறை கடன்கள் மற்றும் முதலீட்டில் அளவில்லாத சலுகைகளை வாரி வழங்க தயாராகியுள்ளது.

வீட்டு கடன்களுக்கான செயலாக்கக் கட்டண தள்ளுபடி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதன் வாடிக்கையாளர்களுக்கு அனைத்து பிரிவுகளிலும் கார் கடனில் 100% செயலாக்கக் கட்டண தள்ளுபடியை அறிவித்துள்ளது. மேலும் கார் கடனில் 90% வரை ஆன் - ரோட் நிதி உதவியையும் வாடிக்கையாளர்கள் பெறலாம்.

அதே போல் தனிநபர் கடன் மற்றும் ஓய்வூதிய கடன் பெறும் வாடிக்கையாளர்களுக்கு அனைத்து பிரிவுகளிலும் செயலாக்கக் கட்டண தள்ளுபடி அளிக்கப்படும் என்றும் வங்கி அறிவித்துள்ளது.

தனிநபர் கடனுக்கு விண்ணப்பிக்கும் 'கோவிட் முன்களப் பணியாளர்களுக்கு' வட்டியில் 50பிபிஎஸ் சிறப்பு சலுகை அறிவித்துள்ள அதே வேளையில், விரைவில் அச்சலுகை கார் மற்றும் நகைக் கடன் விண்ணப்பிப்பவர்களுக்கும் வழங்கப்பட உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் 75-வது சுதந்திர தின விழாவை குறிப்பிடும் வகையில், வங்கி அதன் சில்லறை முதலீட்டாளர்களுக்கு 'ப்ளாட்டினம் கால வைப்பு தொகை' திட்டத்தை அறிமுகம் செய்கிறது. மேலும், 15.08.2021 தொடங்கி 14.09.2021 வரையிலான கால கட்டத்தில், 75 நாட்கள், 75 வாரங்கள், 75 மாதங்கள் காலமுறை வைப்பு தொகை திட்டத்தில் முதலீடு செய்யும் வாடிக்கையாளர்கள் கூடுதல் வட்டி சலுகைகளையும் தற்போது பெற இயலும்.

இது குறித்து டிஜிட்டல் மற்றும் ரீட்டெயல் பேங்கிங், நிர்வாக இயக்குநர் ஷெட்டி கூறுகையில், "வரவிருக்கும் விழாக் காலத்தை முன்னிட்டு சில்லறை வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு சிறப்பு சலுகைகளையும் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். இந்த சலுகைகள் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் கடன்களின் மீதான சேமிப்பையும், விழாக்கால கொண்டாட்டங்களை மகிழ்ச்சியானதாகவும் மாற்றும் என்றும் நாங்கள் நம்புகிறோம். எங்களது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களின் தேவைகளையும் வசதிகளையும் பூர்த்தி செய்யும் வகையில் சிறந்த நிதி தீர்வுகளை அளிக்கும் விதமாக எங்களது எஸ்பிஐ வங்கி தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது." என்றார்.

# முன்பகை காரணமாக இளைஞர் வெட்டிக்கொலை: சண்டக்கோழி பிரச்சினையால் தொடங்கி கொலையில் முடிந்த கொடூரம்



*கிருஷ்ணகிரி, ஆக. 18 2021:* கிருஷ்ணகிரியில் சண்டைக்கோழி பிரச்சினையில் இளைஞர் வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கிருஷ்ணகிரி பழையபேட்டை தஞ்சாவூர் மாரியம்மன் கோயில் பகுதியைச் சார்ந்தவர்கள் இம்ரான், சலாவுதீன். இவர்கள் 14-08-2021 அன்று பழைய பேட்டை முருகன் சினிமா தியேட்டர் அருகே நின்று கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாக மார்கோ என்கின்ற விஜயகுமார் என்பவரும் அவரது மகன் மணிமாறன் என்கின்ற குல்பி என்ற இளைஞரும் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தனர். அப்போது அவர்களை நிறுத்தி இம்ரானும் சலாவுதீன் இருவரும் தரமில்லாத சண்டைக்கோழி கொடுத்து உள்ளீர்கள் என அவர்கள் இருவரையும் கேட்டுள்ளனர்.

வாய் தகராறு இரு தரப்பினருக்கும் முற்றி கைகலப்பாக மாறி நிலையில்,

இளைஞர் மணிமாறன் தனது இருசக்கர வாகனத்தில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து இம்ரான்ஐயும் சலாவுதீன் ஐயும் நெஞ்சு வயிறு ஆகிய பகுதிகளில குத்தியதாக கூறப்படுகிறது. ரத்த வெள்ளத்தில் சாய்ந்த இம்ரான், சலாவுதீன் இருவரையும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் மீட்டு கிருஷ்ணகிரி மாவட்ட அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். பரிசோதித்த மருத்துவர்கள் ஏற்கனவே இம்ரான் இறந்து விட்டதாக கூறினர். படுகாயமடைந்த சலாவுதீன் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

தகவலறிந்த இம்ரானின் உறவினர்கள் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு விரைந்து வந்து கொலையாளிகள் மீது நடவடிக்கை எடுக்க காவல் துறையை வலியுறுத்தினர். ஏற்கனவே கடந்த ஒரு ஆண்டுக்கு முன்பாக இதே சண்டைக்கோழி பிரச்சினையில் மணிகண்டன் என்பவரை மார்கோ என்ற விஜயகுமாரும் மணிமாறன் என்ற குல்பியும் சேர்ந்து கொலை செய்த வழக்கில் கைதாகி ஜாமீனில் வெளிவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. கிருஷ்ணகிரி நகர காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்து கொலையாளிகளை இருவரையும் தேடி வருகின்றனர்.

# 'சுதந்திர இந்தியாவின் சிறுபான்மையினரின் பங்களிப்பு' கருத்தரங்கம் மற்றும் பொதுமக்களுக்கு இலவச தடுப்பூசி முகாம்



*சென்னை, ஆகஸ்ட் 18 2021:* கிறிஸ்துவ நல்லெண்ண இயக்க மாநில இளைஞரணி சார்பில் டாக்டர் எஸ். இனிகோ இருதயராஜ், எம்.எல்.ஏ பிறந்த நாள் சார்பாகவும் மற்றும் 75ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவையொட்டி கருத்தரங்கம் நடைபெற்றது. சுதந்திர இந்தியாவின் சிறுபான்மையினரின் பங்களிப்பு என்ற கருத்தரங்கம் மற்றும் பொதுமக்களுக்கு இலவச தடுப்பூசி முகாம் சர்ச் பார்க் பள்ளி வளாகத்தில் மாநில இளைஞரணி துணை செயலாளர் ரோட்டேரியன் பிரசன்னா @ பிஆர்கே, ஏற்பாட்டின் பேரில் அமைப்பு செயலாளர் நிக்சன், மாநில ஆலோசகர் யேசுதாஸ், ஆகியோர் தலைமையிலும், மாநில இளைஞரணி செயலாளர் , பிலிப் முன்னிலையில் நடைபெற்றது,

இயக்கத்தின் மாநில மாவட்ட பொறுப்பாளர்கள் நிர்வாகிகள், இளைஞர் அணி, வழக்கறிஞர் அணி, மகளிர் அணி, என அனைத்து இயக்க சொந்தங்களும் கலந்து கொண்டனர் இதில் சிறப்பு அழைப்பாளர் இந்திய முஸ்லிம் லீக் மாநில பொதுச்செயலாளர் திரு.முகமது அபுபக்கர் ( முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ) மற்றும் ஆம் ஆத்மி கட்சியின், மாநில பொதுச்செயலாளர் ரோட்டேரியன்.ஈ.ஜோசப் ராஜா, ரோட்டேரியன். டாக்டர்.ஏ.தேவ குமார், ரோட்டேரியன். டாக்டர்.சந்திரகுப்தா. அருட்சகோதரிகள் சிஸ். கிரேஸ், சிஸ். லில்லி, சிஸ். சகாயமேரி, (பிரசெண்டேஷன் கான்வென்ட் , சர்ச் பார்க் பள்ளி), இந்திய மீனவர்கள் நல சங்கத்தின் தலைவர் மா.கி.சங்கர், செயலாளர் தியாகராஜன் ஆகியோர் உடன் இருந்தனர்.என்.பிரபாகரன் ( சமூக சேவகர் ), சி.என்.ஐ இயக்கத்தின் மத்திய சென்னை கிழக்கு மாவட்ட நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், அனைவரும் உடனிருந்தனர்.

# ஸ்ரீவி.கலசலிங்கம் பல்கலையில், 75வது சுதந்திர தின விழா!



*ஸ்ரீவி, ஆகஸ்ட் 18 2021:* கலசலிங்கம் பல்கலையில் 75 வது சுதந்திர தின விழா, பல்கலை துணை தலைவர் எஸ்.சசிஆனந்த் தலைமையில் நடைபெற்றது.

துணை வேந்தர், ஆர்.நாகராஜ், பதிவாளர் வி.வாசுதேவன் முன்னிலை வகித்தனர்.

பல்கலை நிதி துறை சிறப்பு அதிகாரி கே.தர்மராஜ் தேசியக்கொடியை ஏற்றி வைத்து, பல்கலைக்கழக என்.சி.சி அணிவகுப்பு மரியாதையை ஏற்றார்.

துறை தலைவர்கள்,கலசலிங்கம் குரூப் கல்வி நிறுவன முதல்வர்கள்,பேராசிரியர்கள், மற்றும் அலுவலகர்கள் கலந்து கொண்டு சுதந்திர தின உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். விழா ஏற்பாடுகளை, செல்வகணேஷ்,பரமசிவம்,கனகமணி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.



**ஸ்ரீவில்லிபுத்தூர்:** விருதுநகர் மாவட்ட அளவில் சிறப்பாக செயல்பட்ட ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டார அளவில் உள்ள ஆண்டாள் மகளிர் சுய உதவிக்குழுவிற்கான விருதையும் பாராட்டுச் சான்றிதழையும் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் ஜெ.மேகநாத ரெட்டி வழங்கினார். மேற்படி நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இணை இயக்குனரும் விருதுநகர் மாவட்ட திட்ட இயக்குனருமான இரா.தெய்வேந்திரன், உதவி திட்ட அலுவலர் சுந்தரமூர்த்தி, ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டார வாழ்வாதார இயக்க மேலாளர் த.விஜயலட்சுமி மற்றும் மகளிர் குழு ஊக்குனர் பி.வள்ளியம்மாள் ஆகியோர் உடனிருந்தனர்.



**சென்னை:** **நம் நாட்டின் 75-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, சென்னை தெற்கு சரக்கு மற்றும் சேவை வரி ஆணையரகம் மற்றும் தணிக்கை-மிமி ஆணையரகம் சார்பில் சுதந்திரதின விழா நடைபெற்றது. சென்னை நந்தனம் பெரியார் மாளிகையில் உள்ள சென்னை தெற்கு சரக்கு மற்றும் சேவை வரி ஆணையரக அலுவலக வளாகத்தில் நடைபெற்ற இந்த விழாவில், ஆணையர் சுதா கோகா நமது தேசிய கொடியை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். முன்னதாக, ஜிஎஸ்டி கண்காணிப்பாளர் ஆனந்தி தலைமையில் நடைபெற்ற அணிவகுப்பு மரியாதையை ஆணையர் பார்வையிட்டார். நிகழ்ச்சியில், இணை ஆணையர்கள் மனீஷ்காந்த் பனீக், ஜெயப்ரியா, பெரியண்ணன் உட்பட அதிகாரிகளும், அலுவலர்களும் கலந்து கொண்டனர்.**

# "எழுத்தாளர்கள், கலைஞர்கள், அறிஞர்கள் விருதுபெற விண்ணப்பிக்கும் நடைமுறை மாற்றப்பட வேண்டும்..!!" - கமல் ஹாசன்

*சென்னை, ஆகஸ்ட் 18 2021:* எழுத்தாளர்களை, அறிஞர்களை, கலைஞர்களை விருதுகள் வழங்கிப் போற்றுவது ஓர் ஆரோக்கியமான சமூகத்தின் அடையாளம். பண்பாட்டிற்குப் பங்களித்த ஆளுமைகளைக் கவுரவிக்க எண்ணற்ற விருதுகள் தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இத்தகைய விருதுகளுக்கு விண்ணப்பிக்கலாம் எனும் அறிவிப்பும் அவ்வப்போது வெளியாகின்றன. விண்ணப்பித்துப் பெறுவதன் பெயர் விருதல்ல. அதன் பெயர் பரிசு. விருதென்பது தகுதியான ஆளுமையைத் தேடி வரவேண்டிய ஒன்று. கூருணர்வுள்ள எந்தக் கலைஞனும் அமைப்பிற்கு வெளியேதான் தன்னை நிறுத்திக்கொள்வான். எங்கும் தன்னை முன்னிறுத்திக்கொள்ள மாட்டான். சிபாரிசுக் கடிதங்களுக்கு அலைவதோ, தன்னுடைய நூல்களைத் தானே வாங்கி அனுப்பி வைப்பதோ, சான்றிதழ்களை இணைப்பதோ அவனைப் பொருத்தவரை கவுரவமான ஒன்றல்ல. அந்த நிமிர்வே ஒரு கலைஞனின் முதன்மையான அடையாளம். விண்ணப்பித்துப் பெறக்கூடிய எந்த விருதும் தன் ஆளுமைக்கு இழுக்கு என்றே எந்த அசலான கலைஞனும் நினைப்பான். வயிற்றுப்பாட்டுக்குக் கடன் கேட்கவே நல்ல கலைஞன் யோசிப்பான். கடன் கேட்டு அவமானப்படுவதற்குப் பதிலாகப் பட்டினியே கிடக்கலாம் என நினைப்பான். எனக்குத் தெரிந்த, எனக்குக் கற்பித்த எந்தக் கலைஞனும் விருதுக்கு அலைந்ததில்லை. ஒருவருக்கு ஒருவர் முண்டியடித்து விண்ணப்பித்து போட்டி போட்டு உறிப்பானை அடிப்பது போல விருதுக்கு விண்ணப்பம் கேட்டால், அசலான கலைஞர்கள் மௌனமாக நகர்ந்துவிடுவார்கள். ஒவ்வொரு விருதுக்கும் தகுதியானவர்களைக் கொண்டு நடுவர் குழு அமைக்கப்பட வேண்டும். விருதிற்குரிய நபர்களைத் தேடிக் கண்டடைவது இந்தக் குழுவின் பொறுப்பு. நடுவர் குழு உறுப்பினர்களின் விபரங்கள் பொதுவெளியில் வைக்கப்பட வேண்டும். இன்னின்ன தகுதிகளின் அடிப்படையில் இவ்விருதுக்கு இன்னார் தேர்வு செய்யப்பட்டார் என்பதை நடுவர் குழு அறிவிக்க வேண்டும். முடிந்தவரை விருதுகளை அக்கலைஞன் வாழும் ஊரில் சென்று விழா எடுத்து வழங்கவேண்டும். அவன் வாழும் சூழலில் அவனுக்குரிய கவனத்தையும் அங்கீகாரத்தையும் ஏற்பையும் உருவாக்கியளிப்பதே விருதுகளின் நோக்கமாக இருக்கவேண்டும். பல நல்ல கலைஞர்களை அவர்கள் இருக்கும்போதே கொண்டாடத் தவறிய பழி தமிழ்ச் சமூகத்திற்கு உண்டு. தகுதி வாய்ந்த ஒருவர் விருதுகளைப் பெறுவதற்கு முன்னரே இறந்துவிட்டாரெனின், தாமதம் ஆனாலும் அவருக்குரிய கவுரவம் செய்யப்பட வேண்டும். உனக்கு விருது வேண்டுமானால் நீதான் விண்ணப்பிக்க வேண்டும், என்னைத் தேடிவந்து வரிசையில் நின்று பணிந்து பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதில் ஒருவகையான மன்னராட்சி தொனி இருக்கிறது. இந்த வழக்கத்தை உடனடியாக மாற்றுவதுதான் நல்ல அரசின், நல்ல அரசாட்சியின் செயல். தமிழக முதல்வர் இதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.




**பெரியகுளம்:** **தேனி மாவட்டம் பெரியகுளம் தென்கரை தேனி ரோட்டில் உள்ள வைகை கேன்டீன் உரிமையாளர் சரவணன் ராஜா தலைமையில் பி.முத்துமாயன் மின்வாரிய ஓய்வு பெற்றவர் யு.செல்லமுத்து சார்பு ஆய்வாளர் ஓய்வு பெற்றவர், கடைக்கு வருகை புரிந்த மக்களுக்கு மாஸ்க், கிருமிநாசினியை, சமூக இடைவெளியுடன் வினியோகித்தனர்.**

DTP
DESIGN
All online services
8144337349

## அறிவிப்பு

**எனது தாயாரும் லேட்.சங்கரன் மனைவியுமான சீனியம்மாள் அவர்களால் கிரையமாக வாங்கிய ஆண்டிபட்டி சார்பதிவு அலுவலகம் 1975ம் வருசத்திய ஆவண எண் 98/1975 நம்பர் கிரையப்பத்திரம் கடந்த 16.08.2021ம் தேதி அன்று கன்னியப்பிள்ளைபட்டி பஸ் நிலையம் அருகில் உள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுக்க சென்ற போது காணாமல் போய்விட்டது. மேற்கண்ட அசல் ஆவணம் கிடைக்கப் பெற்றவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு தெரியப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

**ச.செல்லப்பன் த/பெ. லேட்.சங்கரன்
கிழக்குதெரு, ரோசனப்பட்டி
மொட்டனூத்து கிராமம்,
ஆண்டிபட்டி வட்டம், தேனி மாவட்டம்.
பின் கோடு 625512.
செல். 9047182864**

**பெரியகுளம்:** **தேனி மாவட்டம் பெரியகுளம் வடகரை முத்தாலம்மன் கோவில் தெருவில் பாதாளசாக்கடை உள்ளது அதை, சரிவர மூடாமல் உள்ளது. அருகில் கோவில், பால் பண்ணை. மக்கள் காலை, மாலையில் சிறுவர் முதல் பெரியவர் வரை பால் பண்ணைக்கு வருகிறார்கள்.**



**பொதுமக்கள் சார்பாக நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை வைக்கின்றனர். புதுப்பாலம் அருகில் குடிக்கும் நீர் பைப் உடைந்து தண்ணீர் ஒரு மாத காலமாக வீணாக செல்கிறது எனவே, நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை வைக்கின்றனர். பெரியகுளத்தில் வைத்தியநாதபுரம் நான்கு வழி சாலை, அரண்மனை தெரு ,ஆர்.எம்.டி.சி. சிக்னல் ,பெண்கள் உயர்நிலை பள்ளி , சௌராஷ்டிரா சத்திரம், திருவள்ளுவர் சிலை, தெற்கு அக்ரகாரம் ,பெரிய பள்ளிவாசல் தெரு தென்கரை மற்றும் அரசு மருத்துவமனை முன் வேகத்தடை போடுமாறு பொதுப்பணி துறைக்கு பொதுமக்களும் , சமூக ஆர்வலர்களும் கோரிக்கை வைக்கின்றனர்.**



**மதுரை:** **மதுரை மாவட்டம் கள்ளிக்குடி வட்டம் செங்கப்படை அரசுப் பள்ளியில் வேளாண்மைத் துறை சார்பில் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் சத்துமிகு சிறுதானியங்கள் சாகுபடி பரப்பினை அதிகரிக்க விவசாயிகளுக்கான விழிப்புணர்வு பயிற்சியினை மாவட்ட ஆட்சித் தலைவர் அனிஷ்சேகர் துவக்கி வைத்து அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# மதுரை ஆதீனத்திற்கு 500 கிலோ எடையுள்ள பளிங்கு சிலை அமைப்பு



மதுரை ஆகஸ்ட் 18 2021 : மதுரை ஆதின மடத்தில் மறைக்க ஆதினகர்த்தர் அருணகிரிநாதரின் 500 கிலோ எடையுள்ள பளிங்கு சிலை பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. உடல் நலக்குறைவு காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை காலமான மதுரை ஆதீனத்தின் 292வது பீடாதிபதியான ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகளின் உடல் மதுரை முனிச்சாலை பகுதியில் உள்ள ஆதினத்திற்கு சொந்தமாக இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த நிலையில் பொதுமக்கள் ஏராளமானோர் மறைந்த மதுரை ஆதினத்திற்கு அஞ்சலி செலுத்துவதற்காக மடத்திற்கு சென்றுவருகின்றனர். தற்போது மறைந்த ஆதினத்தின் பளிங்கு சிலை மக்களின் அஞ்சலிக்காக மடத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதனை ஏராளமான பொது மக்களும், பக்தர்களும் பார்த்து செல்கின்றனர்.





**பெரியகுளம்: தேனி மாவட்டம் பெரியகுளத்தில் விடுதலைச்சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் பிறந்தநாள் விழா-சம்பந்தமாக ஆலோசனை கூட்டம் கண்காணிப்பாளர் டோங்ரே பிரவின் உமேஷ்.துணை கண்காணிப்பாளர் முத்துக்குமார் தலைமையில் நடைபெற்றது. காவல் ஆய்வாளர்கள் மீனாட்சி, முத்துமணி, சுகுமார்-சார்பு ஆய்வாளர்கள் இத்ரிஸ் கான், மணிகண்டன், ஈஸ்வரன், சாகுல்அமீது, பாண்டியராஜன் மற்றும் விசிக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.**





**மதுரை: தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் / நகர கூட்டுறவு கடன் சங்கங்களின் ( டாக்பியா கூட்டமைப்பு ) சார்பில் பணியாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை ஏற்க வலியுறுத்தி தமிழக முதல்வரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் தமிழகம் முழுவதும் நடைப்பெற்றது. இதன் ஒரு பகுதியாக மதுரை மாவட்டம் ஒத்தக்கடையில் டாக்பியா கூட்டமைப்பு சார்பில் மாவட்ட செயலாளர் மற்றும் தென் மண்டல செயலாளர் மற்றும் ஆ.ம.ஆசிரியத் தேவன் தலைமையில் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் நடைப்பெற்றது.**

**இதில் ‘ டாக்பியா ‘ ஒன்றிய நிர்வாகிகள் எஸ்.ரத்தினக் குமார், எம். திருமலைச்சாமி , ஜி.மூர்த்தி , எம்.உபைதுல்லா , வி.மாலதி , எம்.கருப்பணன் , வி.அருவுகம் , எம்.முரளி , கதிர்வேல்பாண்டியன் , சாந்தி , அழகுசுந்தரம் , சங்கர நாராயணன் மற்றும் மதுரை கிழக்கு ,மேற்கு திருப்பரங்குன்றம் வட்டார அனைத்து உறுப்பினர்களும் , நியாயவிலைக் கடை ஊழியர்களும் கலந்துக் கொண்டனர்.**



**விருதுநகர் : விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், ஆமத்தூர் ஊராட்சியில் 75 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு துப்பரவு பணியாளர் சி.மாரியப்பன் தேசிய கொடியினை ஏற்றி வைத்தார் .அருகில், ஊராட்சி மன்றத்தலைவர் குறிஞ்சிமலர்.**

# தமிழக அரசின் வேளாண் பட்ஜெட்டிற்கு விவசாயிகள் சங்கம் நன்றி

கோவை, ஆகஸ்ட் 18 2021 : மேட்டுப்பாளையத்தில் கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கம் மற்றும் ஏர்முனை இளைஞர் அணி சார்பாக முப்பெரும் விழா நடைபெற ள்ளது. இதற்கான ஆலோசனைக் கூட்டம் மாநில தலைவர் சண்முகம் தலைமையில் நடைபெற்றது. பின்னர் தலைவர் சண்முகம் பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்தார்.அப்பொழுது அவர் பேசும் போது, தமிழக அரசு வேளாண் பட்ஜெட்டில் ரூ.4,500 கோடி நிதி ஒதிக்கீடு செய்ததற்கு தமிழக முதலமைச்சருக்கு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். அரசின் 100-நாள் வேலை திட்டம் காரணமாக விவசாய கூலித் தொழிலாளிகள், விவசாயத்தை விட்டு வெளியே சென்றுவிட்டதால் விவசாயத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே அவர்களை விவசாயத்திற்கே பயன்படுத்த வேண்டும் என்றும் விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு பால் கொள்முதல் செய்யப்படுகிறது, இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு உள்ளாகின்றனர். எனவே எருமைப் பாலுக்கு ரூ.60, பசும் பாலுக்கு ரூபாய் 50 என அரசு விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அன்னூரில் கிராம நிர்வாக அலுவலத்தில் விவசாயியை அலுவலக உதவியாளர் அடித்து தாக்கியுள்ளார். அத்துமீறி நடந்து கொண்ட கிராம உதவியாளரை நிரந்தரப் பணி நீக்கம் செய்ய வேண்டும்,விவசாயிகள் மீது போடப்பட்ட 2 வழக்குகளை உடனே வாபஸ் பெற வேண்டும். வனவிலங்குகளால் பயிர் சேதம் ஏற்படுவதை தடுக்க நிரந்தர தீர்வு காண வேண்டும்.. கொரோனா காலத்தில் பொது மக்களை பாதுகாத்த அரசு விவசாயிகளை பாதுகாக்க தவறியது மனதிறகு மிகவும் வேதனை அளிக்கிறது. விவசாயிகளை முன்கள பணியாளர்களாக அறிவித்து முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி செலுத்திட அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். என அவர் கூறினார். நிகழ்ச்சியில் விவசாயிகள் திரளாக கலந்து கொண்டனர்.

# கோவை தடாகம் பகுதியில் செங்கல் சூளைகளுக்கு கனிம வளம் கொள்ளை மாவட்ட கலெக்டர் சமீரன் நேரில் ஆய்வு

கோவை, ஆகஸ்ட் 18 2021: கோவை அருகே தடாகம் பகுதியை சுற்றியுள்ள பகுதிகளில் செங்கல் சூளைகள் நிறைந்திருப்பதால் கனிம வளங்கள் கொள்ளையடிக்கப் படுவதாக மாவட்ட நிர்வாகத்திற்கு தகவல் வந்தது. அதை அடுத்து உடனடியாக மாவட்ட கலெக்டர் சமீரன் உத்தரவின் பேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.அங்கு தடாகம் பள்ளத்தாக்கு பகுதியில் உள்ள பெரிய தடாகம், மாங்கரை, வீரபாண்டி பகுதியில் உள்ள செங்கல் சூளைகளுக்கு கனிமவள கொள்ளை நடைபெற்றதாக தெரியவந்தது. அந்த பகுதியில் உள்ள ஒரு சிலர் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டும் ஏலம் எடுத்துவிட்டு அரசு நிர்ணயித்த அளவிற்கு மேலாக தோண்டி கனிம வளங்களை கொள்ளையடித்து தெரியவந்தது. இந்த சூழ்நிலையில் அந்த பகுதிகளில் மாவட்ட கலெக்டர் சமீரன் கனிமவள அதிகாரிகள் . வடக்கு தாசில்தார், ஆர்டிஓ, வருவாய் அதிகாரிகள், கிராம நிர்வாக அதிகாரிகள் நேரில் சென்று ஆய்வு செய்து நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# தமிழகத்தின் முன்னணி சிறுசேமிப்பு நிறுவனமான மஹிசன் சிட்பண்ட்ஸ் 13வது புதிய கிளை மதுரையில் உதயம்




மதுரை ஆக 18 2021: கூலி வேலை செய்யும் ஏழை எளிய மக்கள், அன்றாடம் தொழில் செய்பவர்கள் தினந்தோறும் கிடைக்கும் வருமானத்தையே நம்பி வாழ்கின்றனர். சம்பாதிக்கும் பணத்தை எதிர்காலத்திற்கு சேமிப்பதற்கு வசதியாக அரசு மற்றும் தனியார் வங்கிகள், அரசு மற்றும் தனியார் சிறுசேமிப்பு நிறுவனங்கள் இயங்கிவருகின்றன.

இன்றைய சிறுசேமிப்பு நாளைய எதிர்காலத்தின் வளர்ச்சி என்பதால் ஏழை எளிய நடுத்தர மக்கள் சிறுசேமிப்பில் ஈடுபட்டுவருகின்றனர்.

அந்தவகையில் 16 வருடங்களாக புதுக்கோட்டையை தலைமையிடமாக இயங்கிவரும் ஏ.ஆர்.எம்.எஸ்.எஸ் குரூப் ஆஃப் கம்பெனியின் மஹிசன் சிட்பண்ட்ஸ் தனது 13வது கிளையை மதுரையில் ஆரம்பித்துள்ளது.

13வது கிளையின் துவக்க நிகழ்ச்சி மதுரை வசந்தநகரில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

மேலாண்மை இயக்குநர் விஜயகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்தியன் வங்கியின் ஓய்வுபெற்ற மூத்த மேலாளர் வீரமணி ரிப்பன் வெட்டி திறந்துவைத்தார்.

தொடர்ந்து பொறியாளர் & அரசு ஒப்பந்ததாரருமான செல்வகுமார், மதுரை உயர்நீதிமன்ற நீதிபதி அசோகன், தொழிலதிபர் சக்திவேல், ஒருங்கிணைப்பாளர் சண்முகம் ஆகியோர் குத்து விளக்கேற்றி சிறப்பித்தனர்.

பொதுமக்களிடையே சிறு சேமிப்பின் அவசியத்தை எடுத்துரைக்கும் வகையில் வங்கிகள் மற்றும் மற்ற நிதி நிறுவனங்களை விட மஹிசன் சிட்பண்டு நிறுவனத்தில் மூத்த குடிமக்கள், பெண்கள் குழந்தைகள் ஆகியோர்க்கு வைப்புநிதி திட்டம், கல்விக்கடன் திட்டம் மகளிர் சுயஉதவிக்குழு திட்டம் இரட்டிப்பு திட்டம் தங்க நகைக்கடன் உள்ளிட்ட திட்டங்கள் பற்றி எடுத்துரைக்கைப்பட்டது.

# நடிகை சம்யுக்தா, வேலண்டினா மிஷ்ரா, ஜான் அமலன் மற்றும் கருண் ராமன் முன்னிலையில், ‘மிஸ்டர், மிஸ் & மிசஸ் தமிழகம் 2022‘ போட்டிக்கான மாபெரும் போட்டியாளர் தேர்வு சென்னையில் நடைபெற்றது



சென்னை, ஆக. 18 2021: இந்தியன் மீடியா ஒர்க்ஸ் நிறுவனம் சார்பில், சமூகத்தில் சிறப்பாக பணியாற்றுபவர்களை ஊக்குவிக்கும் வகையிலும், சமூக காரணங்களுக்காக நிதி திரட்டும் வகையிலும், ஆண்டுதோறும் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவ்வகையில், நடிகை சம்யுக்தா, கருண் ராமன் மற்றும் வேலண்டினா மிஷ்ரா ஆகியோருடன் சேர்ந்து, 'மிஸ்டர், மிஸ் & மிசஸ் தமிழகம் 2022' போட்டியை நடத்தவுள்ளது. இந்த நிலையில், இப்போட்டிக்கான மாபெரும் போட்டியாளர்கள் சென்னையை அடுத்த பாலவாக்கத்தில் நடைபெற்றது.

ஆண்கள், பெண்கள் மற்றும் திருமணமான பெண்கள் என 3 பிரிவினருக்கான இந்த மாபெரும் போட்டியாளர் தேர்வில், தமிழகம் முழுவதிலும்இருந்து 100க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொண்டு, தங்களது திறமைகளைக் காட்டி, மேடையில் அன்ன நடை போட்டனர். மேலும், இந்த நிகழ்வில், நடிகை சம்யுக்தா, சர்வதேச அழகிப்போட்டிக்கான தேசிய இயக்குநர் வேலண்டினா மிஷ்ரா மற்றும் நட்சத்திர ஃபேஷன் பயிற்றுநர் கருண் ராமன் ஆகியோர் நடுவர்களாகக் கலந்து கொண்டு போட்டியாளர்களைத் தேர்வு செய்தனர்.

இதில் தேர்வான போட்டியாளர்கள், அடுத்தாண்டு நடைபெறவுள்ள 'மிஸ்டர், மிஸ் & மிசஸ் தமிழகம் 2022' போட்டியில் பங்கேற்க உள்ளனர். மேலும், இவ்விழாவில் கண்கவர் ஃபேஷன் ஷோவும் நடைபெற்றது. இதில், நடிகையும், மிஸ் சூப்பர் குலோப் 2019 அழகிப்போட்டி வெற்றியாளருமான அக்□ஷரா ரெட்டி மற்றும் ஜெயா மகேஷ் ஆகியோர் நட்சத்திர மாடல்களாக கலந்து கொண்டு அசத்தினர்.

**பெயர் மாற்றம்**

R. சபரி வாசன் S/o. P. ராஜேந்திரன், பிறந்த தேதி : 02/03/2003, ( பிறந்த இடம்: பாய்ச்சல், திருப்பத்தூர் மாவட்டம்) LIG II, 1108, 7 ஆவது தெரு, தமிழ் நாடு வீட்டுவசதி வாரியம், வேளச்சேரி, சென்னை 600 042 என்னும் இடத்தில் வசிக்கும் நான் இனிமேல் **சபரி வாசன் C R** என்று பெயர் மாற்றம் செய்துகொண்டேன்.

**இப்படிக்கு**
**சபரி வாசன் C R**

ஹலோ மிரர் மெட்ராஸ்-ல்
கோர்ட் நோட்டீஸ்,
காணவில்லை, பெயர் மாற்றம்
விளம்பரம்
குறைந்த கட்டணம்

# உத்திரமேரூர் பணிமனைக்கு தொடர்ந்து 4-வது முறையாக சிறந்த கிளை மேலாளருக்கான விருது



காஞ்சிபுரம், ஆக.18 2021: அரசு போக்குவரத்து கழகம், உத்திரமேரூர் பணிமனைக்கு , தொடர்ந்து நான்காவது முறையாக சிறந்த கிளை மேலாளருக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் கோட்டம், அரசு போக்குவரத்து கழகம், காஞ்சிபுரம் மண்டலத்தில், 10 பணிமனைகளில், முறையான பஸ் பராமரிப்பு, டீசல் சிக்கனம், அதிக வருவாய் ஈட்டுதல் உள்ளிட்ட பல காரணங்களுக்காக, ஒரு பணிமனையை தேர்வு செய்து, குடியரசு மற்றும் சுதந்திர தின விழாவில், சிறந்த கிளை மேலாளருக்கான விருது வழங்கப்படுகிறது.

அதன்படி, நேற்று முன்தினம் நடந்த சுதந்திர தின விழாவில், விழுப்புரம் கோட்டம், மேலாண் இயக்குனர் பொன்முடி, உத்திரமேரூர் பணிமனை கிளை மேலாளர் எம்.கருணாகரனுக்கு சிறந்த பணிமனை கிளை மேலாளருக்கான விருது மற்றும் சான்றிதழ் வழங்கி பாரட்டினார்.

ஏற்கனவே உத்திரமேரூர் பணிமனைக்கு, கடந்த லோக்சபா தேர்தலன்று, தமிழகத்திலேயே, 130 சதவீதம் அரசு பஸ்களை இயக்கியதற்காக பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.

கடந்த, 2019ல், 365 நாட்களும் அனைத்து பஸ்களையும் இயக்கிதற்காக ‘பணித்திறன் நற்சான்றிதழ்’ வழங்கப்பட்டது.

கடந்த ஆண்டு, கொரோனா ஊரடங்குக்கு பின், எந்த பணிமனையிலும் இல்லாத வகையில், 111 சதவீத அரசு பஸ்களை இயக்கியதற்காக விருது வழங்கப்பட்டது.

தற்போது, டீசல் சிக்கனம், பஸ் டயர்களின் ஆயுள் நீட்டிப்பு, கடந்த சட்டசபை தேர்தலன்று, பணினையில் உள்ள 100 சதவீதம் ஊழியர்களும் ஓட்டுபோட்டதோடு, 135.8 சதவீதம் பஸ்களை இயக்கியது உள்ளிட்ட காரணங்களுக்காக நான்காவது முறையாக விருது வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# தலைமறைவாக இருந்த பிரபல ரவுடி படப்பை குணா கைது




காஞ்சிபுரம், ஆக.17 2021: காஞ்சீபுரம் மாவட்டத்தில் பல்வேறு குற்ற வழக்குகளில் சம்மந்தப்பட்டு தலைமறைவாக இருந்த பிரபல ரவுடி படப்பை குணாவை போலீசார் கைது செய்தனர்.

காஞ்சீபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கீரநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த பிரபாவதி (பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது) . அவரது தாய் தந்தையருக்கு சொந்தமான நிலத்தின் சந்தை மதிப்பு விவரத்தினை பார்ப்பதற்காக மதுரமங்கலத்தை சேர்ந்த சுங்குவார்சத்திர காவல் நிலைய பிரபல சரித்திர பதிவேடு ரவுடியான குணா ( எ ) படப்பை குணா (44), பட்டாவை பெற்று சென்றுள்ளார். மேலும் படப்பை குணாவிடம் பிரபாவதியின் தந்தை சுமார் ஒன்றரை வருடத்திற்கு முன்பு ரூபாய் 2 லட்சம் கடன் பெற்றுள்ளார். ரவுடி குணா தற்போது மேற்படி நிலத்தின ஆவணத்தை கேட்டு மிரட்டி வந்துள்ளார். இந்நிலையில் பிரபாவதி நிலத்தின் பட்டாவை பெற்று சென்றதால் குணா ( எ ) படப்பை குணா தனது அடியாட்களை விட்டு பிரபாவதியை மிரட்டியுள்ளார். இதுசம்பந்தமாக பிரபாவதி சுங்குவார்சத்திரம் காவல் நிலையத்தில் புகார் அளித்ததன்பேரில் ரவுடி குணா ( எ ) படப்பை குணா மற்றும் அவரது கூட்டாளிகள் மீது வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது இவ்வழக்கில் தலைமறைவாக இருந்த வந்த ரவுடி குணா ( எ ) படப்பை குணாவை காஞ்சிபுரம் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு டாக்டர் எம்.சுதாகர் உத்தரவின் பேரில், சுங்குவார்சத்திரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் கைது செய்து சிறையில் அடைத்தார். குணா ( எ ) படப்பை குணா காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் பல்வேறு காவல் நிலையங்களில் கொலை, கொலை முயற்சி மற்றும் அடிதடி மொத்தம் 24 வழக்குகளில் சம்மந்தப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ரவுடிகள் மீது தொடர்ந்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், எவரேனும் பொதுமக்களுக்கும், அவர்களது சொத்துக்கும் அச்சுறுத்தும் வகையில் செயல்பட்டால் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு டாக்டர் எம். சுதாகர் தெரிவித்தார்.



**காஞ்சிபுரம்: காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட கலெக்டர் டாக்டர் எம்.ஆர்த்தியிடம், எழுதுக இயக்கம் சார்பாக புதிதாக புத்தகம் எழுதிய மாணவ, மாணவியர்கள் சந்தித்து தாங்கள் எழுதிய புத்தகங்களை வழங்கி வாழ்த்து பெற்றனர். அருகில் ஊரக வளர்ச்சி திட்ட இயக்குனர் ஸ்ரீதேவி, ஒருங்கிணைப்பாளர் சுகுமாறன் மற்றும் தமிழரசி ஆகியோர் உள்ளனர்.**



**சென்னை: ஓ.என்.ஜி.சி அண்ணா நகர் அலுவலகத்தில் 75 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு மூவர்ன கோடி ஏற்றினார் ஆர்.கே.தஸ்மனா செயல் இயக்குனர் கிருஷ்ணா கொதாவரி படுகை மற்றும் காவேரி படுகையின் மேளாலர். மேலும் அவர் பேசுகையில் கொரோனா பேரும் தொற்று காலகட்டத்திலும் அயராது உழைத்து நாட்டின் ஏரிசக்த்தி உற்பத்திக்கு உழைத்த அனைத்து ஊழியர்களுக்கும் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார்.**

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

# HELLO Mirror MADRAS

hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 Daily Morning Newspaper

The Truth

VOLUME - 1 | CHENNAI | DAILY | 4 Pages | Wednesday, August 18, 2021 | Rs.2/- | ISSUE - 35









# V.O.C. Port sets a record by unloading 57,090 Tonnes of Coal in 24 hours



Tuticorin, August 18 2021: On 15.08.2021, the V.O. Chidambaranar Port created a new record by unloading 57,090 Tonnes of Coal in 24 hours, at Berth No.9 from the vessel, 'M.V. Star Laura, surpassing the earlier record of 56,687 tonnes of Coal handled at Berth No.9, from the vessel 'M.V. Ocean Dream' on 27.10.2020. It is also a matter of pride that, 1,82,867 Tonnes of cargo handled in a day is the highest volume of cargo handled in a single day, this year.

The Marshall Islands flagged Panamax class vessel 'M.V. Star Laura', with floating draft of 14.20 Metres, arrived from the Port of Maura Berau, Indonesia, with 77,675 Tonnes of Coal consigned for M/s. India Coke and Power Pvt. Ltd. The 3-Harbour Mobile cranes operated by M/s. IMCOLA Crane Company, Tuticorin, discharged 57,090 Tonnes of coal within a span of 24 hours. The Shipping Agents for the Vessel was M/s. JNP Shipping Agencies Tuticorin, and Stevedore Agent was M/s. Chettinad Logistics, Tuticorin.

T.K. Ramachandran, Chairman, V.O.C. Port Trust, appreciated the synergy exhibited by the stakeholders, who have contributed to achieve this record, and said that the Port is continuously striving to achieve improvement in performance and productivity in order to attract more volumes of traffic.

# UK expresses willingness for collaborating with India on Green Hydrogen

New Delhi, August 18 2021: India has already retired 16369 MW of inefficient thermal units till March, 2021. This was stated by the Union Minister of Power and Renewable Energy, RK Singh, in a meeting with the Rt Hon Alok Sharma, COP 26 President, here today. The COP26 President had raised the topic of phasing out of coal fired power plants, in the meeting. Secretary (Power), Secretary (MNRE) and High Commissioner of UK in India were also present.

The Rt Hon Alok Sharma expressed the willingness of the UK side for collaborating with India on Green Hydrogen.Both the sides expressed their willingness to explore the possibility of establishing a World bank for Green Energy which could materialise the proposal for $100 billion climate finance pledged by the developed countries under the Paris Agreement.The UK side requested India's support for organizing a successful COP26.





RK Singh expressed India's interest in collaborating with the UK on offshore wind. He also stressed on the need of the developed and developing countries to work together for bringing down the cost of storage. He informed the delegation that India is the only G20 country whose actions are in accordance with the NDCs set by them under the Paris Agreement.

During the meeting, discussions were held on the need of increasing storage capacity in view of India's ambitious target of having 450 MW of installed Renewable Capacity by 2030.The UK side was invited to participate in the upcoming bids for Green Hydrogen and lithium-ion.

# LAKSHMI SAMYUKTHA KOTHA WAS PRESENTED DOCTOR OF EDUCATION FROM INTENATIONAL PEACE UNIVERSITY ON 14-08-2021 IN THE UNIVERSITY CONFERENCE CONDUCTED AT PONDICHERRY



Chennaii, August 18 2021: A Dedicated and innovative Educationist DR.LAKSHMI SAMYUKTHA KOTHA with rich academic and administrative experience; offering an illustrious career spanning over 18 years in various renowned Institutions and currently holding the position of D.G.M in Narayana Group Of Institutions, Tamil Nadu, has been presented HONOURARY DOCTORATE IN THE FIELD OF EDUCATION by INTERNATIONAL PEACE UNIVERSITY for her research in implementing new systems and improving existing education processes by leveraging vast experience in Education Sector.

Her expertise in preparing schedules and materials for State, CBSE, ICSE and IGCSE levels is appreciated and honored. She was earlier recognized as "Best Higher order skills developing and resource person" in Bloom's Taxonomy and also received "Best Teacher Trainer Award" by Australian Academy of Training.

In the International Peace University conference presided by DR.KIM and DR.A.GOPIKANNAN (HON.REGISTRAR, IPU), DR.DANELA NORA Chairman, Global Accreditation Council, Germany, presented Honorary Doctorates to 37 deserving candidates from across country.

# GO FASHION (INDIA) LIMITED files DRHP with SEBI for its IPO

Chennai, August 18 2021: GO FASHION (INDIA) LIMITED among the largest women's bottom-wear brands in India, with a market share of approximately 8% in the branded women's bottom-wear market in Fiscal 2020 (Source: Technopak Report) filed its DRHP with SEBI.

The company is engaged in the development, design, sourcing, marketing and retailing a range of women's bottom-wear products under the brand, 'Go Colors' and are among the few apparel companies in India to have identified the market opportunity in women's bottom-wear and have acted as a 'category creator' for bottom-wear. They have leveraged their first-mover advantage to create a direct-to-consumer brand with a diversified and differentiated product portfolio of premium quality products at competitive prices. (Source: Technopak Report)

The Initial Public Offer (IPO) consists of equity shares of face value of Rs.10 each ("Equity Shares") of GO Fashion (India) Limited comprising a fresh issue aggregating up to Rs.1,250 million by the Company (the "Fresh Issue") and an offer for sale of up to 745,676 equity shares by PKS FAMILY TRUST, up to 745,676 equity shares by VKS FAMILY TRUST (collectively referred to as to the "PROMOTER SELLING SHAREHOLDERS"), up to 7,498,875 equity shares by SEQUOIA CAPITAL INDIA INVESTMENTS, up to 3,311,478 equity shares by INDIA ADVANTAGE FUND S4 I and up to 576,684 equity shares by DYNAMIC INDIA FUND S4 US I. (COLLECTIVELY REFERRED TO AS "INVESTORSELLING SHAREHOLDERS)

The Company proposes to utilise the Net Proceeds towards: (i) Funding roll out of 120 new Exclusive Brand Outlets; (ii) Funding working capital requirements and (iii) General corporate purposes.

BOOK RUNNING LEAD MANAGERS to the issue: JM Financial Limited, DAM Capital Advisors Limited (Formerly IDFC Securities Limited) and ICICI Securities Limited^.

The equity shares will be listed on BSE and NSE.

# Comfy Snug Fit unboxes the freedom from menstrual taboos with its Independence Day campaign

Chennai, August 18 2021: Comfy Snug Fit, a fast growing menstrual hygiene brand from the house of Amrutanjan Healthcare Limited (Amrutanjan Healthcare), attempts to unbox freedom from menstrual taboos in its latest digital campaign for Independence Day. With this campaign being launched on the 75th Independence Day of India, Comfy aims to deliver a powerful message on what actual independence feels like for menstruating women by revealing the years of discomfort hidden inside a brown paper bag. It hopes to free our minds of age-old taboos surrounding menstruation.

Through this digital campaign, Comfy highlights how women have progressed since independence, and yet they continue to face the stigma attached to menstruation. The menstrual period is a natural phenomenon and using sanitary napkins is no more than a hygienic need. Nevertheless, conversation surrounding menstruation is still considered taboo with the topic only allowed to in hushed tones. This extends to over-the-counter sales of sanitary napkins, which are sold wrapped in newspaper, or hidden in brown paper or black plastic bags.

This brown paper bag is a signifier of the years of shame, taboo, suffering, and ignorance that continues to stigmatise menstruation by our society so many decades after Independence.

Comfy's 'Unboxing Freedom' campaign, which will feature an unboxing video in which the sanitary pad is 'unboxed' from a brown paper bag, is an earnest appeal to de-stigmatise menstruation and normalise it.

According to National Family Health Survey, 62%* of young Indian women in the age group 15 to 24 years are still using cloth while menstruating and less than 20%* of women have access to sanitary pads in India.

Commenting on the condition of Indian menstruating women today, S. Sambhu Prasad, Chairman & Managing Director, Amrutanjan Health Care Ltd said, "The level of awareness and education regarding women's menstrual health and hygiene remains low. Most critically, it is still considered a stigma in major parts of our country. We at Amrutanjan Healthcare, aim to highlight this issue. On this Independence Day, we aim to encourage free discussion and conversation around women's menstrual health and hygiene, in an effort to empower the women of India."

M a n i Bhagavatheeswaran, Chief Marketing Officer, Amrutanjan Health Care Limited, "#Unboxing Freedom brings to life the fact that even after many years of independence, our ideas on menstruation and usage of sanitary napkins still need to gain freedom from taboo and societal stereotypes. The brown bag represents the very same stigma that society has around menstruation. The campaign urges society to free themselves of these inhibitions and make women feel more comfortable and confident while talking about menstruation. This is our attempt at unboxing the hidden freedom for every woman in India."

Comfy's digital campaign aims to activate #ThePowerToBeYou and empowers women to be who they are by ditching the brown bag and getting comfortable with the sanitary pad without feeling any shame or embarrassment.

Deepak Kumar, Chief Creative Officer at Korra said, "Unboxing is a trend we are all used to on the internet. So we thought of using it to unbox the stories of young girls that reflect the way our society trains us to be embarrassed about carrying sanitary napkins in the open. And we couldn't find a better day to make this point clearer than on the most important day of the year for the country. We look forward to continued partnership with Amrutanjan in their effort to raise awareness on menstruation hygiene."

**NAME CHANGE**

I, Sabari Vaasan R S/o. P. Rajendran, Date of birth: 02/03/2003, (Place of Birth: Paachal, Tirupathur Dist), Residing at LIG II, 1108, 7th Street, TNHB, Velachery, Chennai 600 042 shall henceforth be known as **Sabari Vaasan C.R.**

Sabari Vaasan C. R.

# Its raining offers from SBI for its retail customers

Chennai, August 18 2021: As the country is celebrating Azadi Ka Amrit Mahotsav which is a GOI's initiative to commemorate 75 years of Indian independence the country's largest bank State Bank of India (SBI) is also geared up to provide an array of offerings on its retail loans and deposits to its customers.

After announcing processing fee waiver on Home loans, the Bank has announced a 100% waiver on processing fees for its Car loan customers across all channels. The customers can further enjoy the facility of up to 90% on-road financing for their Car loans.

SBI is offering a special interest concession of 25 bps for customers applying for a Car loan via YONO. The users of YONO SBI planning to bring home a new car can avail of the loan at an interest rate of as low as 7.5% per annum.

For its Gold loan customers, the Bank is offering a reduction of 75bps in the interest rates. Customers can now avail of Gold loans from across all channels of the bank at 7.5% per annum. The bank has further waived off the processing fee for all the customers applying for a gold loan via YONO.

For its Personal & Pension loan customers, the Bank has announced a 100% waiver in processing fees across all channels.

The Bank has also announced a special interest concession of 50 bps to covid warriors i.e., 'frontline healthcare workers' applying for Personal loans, which soon will be available for application under Car and Gold loans as well.

For retail depositors, the Bank is introducing 'Platinum Term Deposits' to mark 75 years of independence. Customers can now get additional interest benefit up to 15 bps on Term Deposits for 75 days, 75 weeks, and 75 months tenors starting 15.08.2021 till 14.09.2021.

C S Setty, MD (Retail & Digital Banking), SBI said, "We are glad to announce multiple offerings for all our retail customers ahead of the festive season. We believe that these offerings will help customers to save more on their loans and at the same time add value to their festive celebrations. It is our constant endeavor at SBI to offer the best financing solutions to all our valued customers and help them fulfill their needs and requirements."



**Chennai: The country's 75th Independence Day was celebrated at the Goods and Services Tax South commissionerate in Nandanam, Chennai. Chennai South Goods and Services Tax Commissioner Sudha Koka hoisted the National Flag at the Commission's office premises and accepted the guard of honor of the officers. The event was attended by Joint Commiissioners Manish Kanth Panik, Jayapriya, Periannan , Asst Coomissioners and GST officials, staff and their families.**


Owned & Pubilshed by R.SATHYANARAYANAN from No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 26, and printed by him at chennai offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-2, Editor: R.SATHYANARAYANAN, Email: hellomadrasdaily@gmail.com. Contact: 8148231942. Subject to Chennai Court Jurisdiction